DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.154/2022 | Deposition of Witness for : PW2 |
| Name : முத்துராஜன் | Father/Husband Name : செல்லப்பண்டாரம் |
| Age : 45 | Village : வடக்கு இளமால்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16 July 2026.

Accused absent. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது வடக்கு இளமால்குளத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும் எனது மனைவி ஆவார் எதிரிகளை தெரியும் தற்போது நாங்கள் சமாதானமாக போய்விட்டோம். எங்களை சமாதானமாக போகும்படி யாரும் தூண்டவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. கடந்த 15.10.2021 ம் தேதி என் மனைவி ஊரில் உள்ள அம்மன் கோவில் விளக்கு பூஜையின் போது எனது மனைவிக்கும் எதிரிகளுக்கும் இடையே சிறிய பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 17.10.2021 அன்று காலை சுமார் 09.30 மணிக்கு என் மனைவியின் ஊர் தர்மகர்த்தா சித்திரை மகன் முருகன் சொன்னதாக சுடலைமணி வந்து என் மனைவிடம் சொன்னதாக கோவிலுக்கு செல்லக்கூடாது, கோவிலுக்கு வெளியே தான் இருக்க வேண்டும் என்று சொன்னார்களா என்றால் அது எனக்கு தெரியாது. பின்னர் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு என் மனைவி வீட்டில் தனியாக இருக்கும் போது எதிரிகள் கையில் கம்பு, அருவாளுடன் என் வீட்டிற்கு வந்து என் மனைவியை ஏய் நொண்டி தேவடியா, மலட்டு முண்ட, வெளியூர்காரி என்று ஆபாசமாக திட்டினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் என் மனைவியை கம்பாலும், காலாலும் என்னை மாறி, மாறி அடித்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கின் சம்பவத்தை பற்றி போலீசாரிடம் உண்மையை கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக செல்வதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை** : இல்லை

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.16 19:26:26 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.16 19:26:33 +0530

Judicial Magistrate, Sathankulam.